# அக்டோபர் – 23 – திங்கள்

**கபிஸ்தானோ நகர புனித யோவான்**

**“எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள்” லூக் 12:15**

## முதல் வாசகம் : உரோமையர் 4 : 20 - 25

சகோதர சகோதரிகளே! கடவுளின் வாக்குறுதியைப் பற்றி ஐயப்படவே இல்லை நம்பிக்கையில் அவர் மேலும் வலுப் பெற்றார் கடவுளைப் பெருமைப்படுத்தினார்.தாம் வாக்களித்ததைக் கடவுள் செய்ய வல்லவர் என்பதை அவர் உறுதியாய் அறிந்திருந்தார்.ஆகவே ”அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.””நீதியாகக் கருதினார்” என்று எழுதியுள்ளது அவரைமட்டும் குறிக்கவில்லை. நம்மையும் குறிக்கின்றது இறந்த நம் ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்தவர்மீது நம்பிக்கை கொண்டிருக்கும் நாமும் அவ்வாறே கடவுளுக்கு ஏற்புடையவர்கள் எனக் கருதப்படுவோம்.நம் குற்றங்களுக்காகச் சாகுமாறு கடவுள் இயேசுவை ஒப்புவித்தார் நம்மைத் தமக்கு ஏற்புடையவர் களாக்குமாறு அவரை உயிர்த்தெழச்செய்தார்.

**பதில்பாடல் :** தம் மக்களைத் தேடி வந்த இஸ்ரயேலின்
ஆண்டவரைப் போற்றுவோம்

## நற்செய்தி : லூக்கா 12 : 13 – 21

அக்காலத்தில் கூட்டத்திலிருந்து ஒருவர் இயேசுவிடம், ”போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக்கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்” என்றார்.அவர் அந்த ஆளை நோக்கி, ”என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?” என்று கேட்டார்.பின்பு அவர் அவர்களை நோக்கி, ”எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது” என்றார். அவர்களுக்கு அவர் ஓர் உவமையைச் சொன்னார் ”செல்வனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.அவன், ”நான் என்ன செய்வேன்? என் விளை பொருள்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே!” என்று எண்ணினான்.”ஒன்று செய்வேன் என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் அங்கு என் தானியத்தையும் பொருள்களையும் சேர்த்து வைப்பேன்”.பின்பு, ”என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பல வகைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன் நீ ஓய்வெடு உண்டு குடித்து, மகிழ்ச்சியில் திளைத்திடு” எனச் சொல்வேன்” என்று தனக்குள் கூறிக்கொண்டான். ஆனால் கடவுள் அவனிடம், ”அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?” என்று கேட்டார்.கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவராய்த் தமக்காகவே செல்வம் சேர்ப்பவர் இத்தகையோரே.” என்றார்

**தியானம்:** சாத்தானின் இவ்வுலக மாயக் கவர்ச்சிகளில் ஒன்று செல்வம். இதனை சேர்க்க நாம் படாத பாடு படுகிறோம். அதிக செல்வத்தை சேர்த்தவர்கள் நிம்மதி இன்றி அலைவதையும், நோய்களோடு போராடுவதையும் பார்க்கிறோம். யாருக்காக செல்வம் சேர்க்கிறோம்? எமக்காகவா’? எமது பிள்ளைகளுக்காகவா? எந்த நேரம் மரணம் வரும் என்று எமக்கு தெரியாது. அது இறைவனுக்கு மட்டும் தெரிந்த பரம ரகசியம். விபத்தில் இறப்பவர்களிற்கு தெரியாது இன்னும் சில நிமிடங்களில் நாம் இறக்கப் போகிறோம் என்று. தெரிந்திருந்தால் அவர்கள் அதனை தவிர்த்திருக்கலாம் அல்லவா? எனவே வாழும் காலம் சிறியது, அதனை நாம் எவ்வாறு வாழப் போகிறோம்? ஓடி ஓடி உழைக்கிறோம். இவ்வுலகின் பார்வையில் உயர்ந்த அந்தஸ்த்தில் இருக்க விரும்புகிறோம். கடவுளின் பார்வையில்---? இன்று எமது இளைய சமுதாயத்திற்கு, கஷ்டம் என்றால் என்ன என்று தெரியாது. அவர்கள் கேட்கும், விரும்பும் எல்லாம் கிடைக்கிறது. தொலைபேசியும், முகநூலும், விளையாட்டுக்களும் தான் அவர்களின் உலகமும், வாழ்வும். “ப்ளு வேல்” என்ற ஒரு விளையாட்டினால் இன்று பலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்ற செய்தி வந்தவண்ணம் உள்ளது. பல பெற்றோருக்கு பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், என்ன படிக்கிறார்கள் என்றே தெரியாது. புதிய தொழில் நுட்பம் அவர்களிற்கு தெரியாத படியால் பிள்ளைகள் செய்வதை அவர்களால் அறிய முடியவில்லை. பணமும், புகழும் மட்டும் வாழ்வல்ல. பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்கவும் தெரிய வேண்டும். நற்செய்தியில் கூறப்பட்டது போல் பேராசை கொள்ளாமல், இருப்பதைக் கொண்டு சுகமாக வாழலாமே!